1979 ஏப்ரல் 25]

வறட்சி நிவாரணப் பணிகளுக்கான செலவு.

*வினா எண். 807—திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாககளுக்கு விடையளிப்பாரா —

(அ) 1970 ஆம் ஆண்டுக்குப் பிறகு வறட்சி நிவாரண வேலைக்காக தமிழ்நாட்டில் எவ்வளவு தொகை செலவிடப்பட்டது ?

(ஆ) அதில் தொழிலாளர்களுக்கு எத்தனை சதவீதம் ஊதியமாக வழங்கப்பட்டிருக்கிறது ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) 1970 ஆம் ஆண்டிலிருந்து 1977 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் வரை வறட்சி நிவாரணப் பணிகளுக்காக மொத்தம் ரூபாய் 54.16 கோடி செலவிடப்பட்டுள்ளது.

(ஆ) தொழிலாளர்களுக்கு ஊதியமாக வழங்கப்பட்ட சதவீதம் (சராசரி) பின்வரும் பட்டியலில் கொடுக்கப்பட்டு உள்ளது :—

வரிசை எண்ணும் திட்டமும்.	சதவீதம் (சராசரி)
(1) துளைக் கிணறுகள்	5.8
(2) சிறுபாசன சிறப்புத் திட்டங்கள் மற்றும் சிறுபாசன விரைவுத் திட்டங்கள் ..	60
(3) வெயில் காலத்தில் பயன்படுத்தப்படும் சாலைகள்	56
(4) மண்வளப் பாதுகாப்பு	80
(5) காடு வளர்ப்பு	66

குடிநீர்த் திட்டம் நீங்கலாக ஏனைய வறட்சி நிவாரணப் பணிகளான காடு வளர்ப்பு, சிறு பாசனத் திட்டங்கள், வெயில் காலத்தில் பயன்படுத்தும் சாலைகள், மண்வளப் பாதுகாப்பு அனைத்தும், வறட்சிப் பகுதிகளில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வேலை வாய்ப்புகள் தரும் வகையில் செலவிடப்படுகின்றது.

[முற்பகல் 9-20]

திரு. ரா. கிருஷ்ணன் : பேரவைத் தலைவர் அவர்களே இந்தக் கேள்வியின் நோக்கம், இந்த வறட்சி நிவாரணப் பணியினால், அந்தப் பகுதியிலே சாதாரண ஏழைத் தொழிலாளர்களுக்கு அதிகமாக சம்பளம், ஊதியம் கொடுக்க வேண்டுமென்பதற்காகத்தான். ஆனால், நடைமுறையில் எப்படி இருக்கின்றது என்றால், கான்ட்ராக்டர்களும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் இதிலே பல்வேறு ஊழல்களும், மோசடிகளும் செய்திருப்பதாகவும்

[1979 ஏப்ரல் 25

குறிப்பாக, பஞ்சாயத்துத் தலைவர்கள் மோசடி செய்திருப்பதாக வும் தகவல் இருக்கிறது. அப்படிப்பட்ட முறைகேடுகளின்மீது அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா என்று அறிய விரும்பு கிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, இது 1970-லிருந்து கணக்குக் கொடுத்தி ருக்கிறேன். ஆனால் புயல், வறட்சி வருகின்றபோது, அங்கேயிருக்கின்ற ஏழை எளியவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்ற நோக்கத்தோடு, அங்கேயுள்ள தொழிலாளர்களைப் பயன் படுத்திக் கொள்ள அரசு திட்டம் வைத்துள்ளது. இந்தத் திட்டத்தின் மூலம் அங்கேயிருக்கின்ற வேலையற்ற தொழிலாளர்கள் வேலையில் அமர்த்தப்படுகின்றார்கள். ஆனால், எங்கே ஊராட்சி மன்றத் தலைவர்கள், பெருந் தலைவர்கள் யாராவது தவறு செய்கிறார்கள் என்று குறிப்பாகச் சொன்னால், இந்த அரசு நடவடிக்கை எடுக்கும்.

டாக்டர் கே. சமரசம்: பேரவைத் தலைவர் அவர்களே, வறட்சி நிவாரணப் பணியின்கீழ் நிவாரணத் தொகையாக குடிசை வாழ் மக்கள் எவ்வளவு பெற்றிருக்கிறார்கள்? இந்தத் திட்டத் தின்கீழ் அரசு எவ்வளவு தொகையை வழங்கியிருக்கின்றது என் பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, 70-லிருந்து 77 வரைக்கும் என்னிடத்திலே கணக்கு இல்லை. ஆனால், 78-லே மட்டும் கணக்குச் சொல்ல வேண்டுமானால், பாதிக்கப்பட்ட குடிசைகள் 1,40,231. அப்படி பாதிக்கப்பட்ட குடிசைகளுக்கு கொடுக்கப்பட்ட பணம் ரூ. 89,43,146. ஆனால், இந்த நிவாரணமாக 5 கிலோ, 50 கிலோவாக கொடுக்கப்பட்ட அரிசி மட்டும் நவம்பர், டிசம்பர் மாதங்களில் கொடுத்தது 1,97,77,470 கிலோ அரிசி என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன்: தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் ஏற்கனவே கிராமப்புறங்களிலே ஏற்பாடு செய்வதாக அறிவிக்கப்பட்டது. இப்படிப்பட்ட திட்டம் என்றால், உண வுக்கு வேலை என்ற திட்டம். அதற்காக இந்த அரசு இப் போது எந்த அளவிற்கு ஒதுக்கீடு செய்திருக்கிறது? எப்போது இதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யும் என்பதை அறிய விரும்பு கிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: புதிதாக அறி விக்கப்பட்ட திட்டம் நடைமுறையில் இருக்கிறது. இதைப்பற்றி தனிக் கேள்வி போட்டால் சொல்லலாம்.

1979 ஏப்ரல் 25]

திரு. மு. ஜான் வின்சென்ட்: பேரவைத் தலைவர் அவர்களே, 1978 மார்ச்சு மாதத்திற்குள் பாராளுமன்றத்தில் 60 கோடி ரூபாய் தமிழகத்தில் ரோடு பராமரிப்பிற்காக ஒதுக்கப்பட்டிருப்பதாகக் கூறியிருக்கிறார்கள். அந்தத் தொகை இங்கே செலவழிக்கப்பட்டதா? அல்லது செலவழிக்கப்படாமல், மத்திய அரசுக்குத் திருப்பி அனுப்பப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, 1977-78க்கு வெள்ளம், புயலுக்காக மத்திய அரசால் முன்பணமாகக் கொடுக்கப்பட்டது ரூ.20.52 கோடிதான். மானியமாகக் கொடுத்தது ரூ. 8.79 கோடி. இவைகள் செலவழிக்கப்பட்டிருக்கின்றன.

திண்டிவனம் தொகுதியில் விவசாயக் கடன்களுக்கு அபராத வட்டி.

*வினா எண். 808 :—திரு. டி. ஆர். இராஜாராம் ரெட்டி: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டிவனம் தொகுதியில் பல ஆண்டுகளுக்கு முன்னர் வாங்கிய உரக்கடன் போன்ற விவசாயக் கடன்கள், தாசில்தார் கொடுத்த டிமாண்ட்படி தொகை செலுத்தப்பட்ட பின்பும் அக் கடன்களுக்கு அபராத வட்டி என மீண்டும் கிராம அதிகாரிக்கு நெ. 1 டிமாண்டுகள் கொடுத்து வசூலிக்கும்படி தாசில்தார் உத்திரவிட்டுள்ளாரா?

(ஆ) இந்த அபராத வட்டி எந்த கடனுக்காக எந்த ஆண்டில் எவ்வளவு தொகைக்கு டிமாண்டு கொடுத்து வசூலிக்கப்பட்டது?

(இ) தற்போது எத்தனை நபர்கள் மீது அபராத வட்டிக்காக எவ்வளவு தொகை வசூலிக்கும்படி டிமாண்டு தரப்பட்டு உள்ளது, தாலூகா வாரியாக?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: (அ) ஆம்.

(ஆ) இந்த அபராத வட்டி 1377-ம் பசலி முதல் அதாவது 1—7—1967 முதல் காலம் கடந்து திருப்பிச் செலுத்தப்பட்ட பல்வேறு கடன்களுக்காக 1—7—77-ல் ரூ. 10,48,228.25-க்கு நெ. 1 டிமாண்டு கொடுக்கப்பட்டு 1—7—77 முதல் 30—6—78 வரை ரூ. 38,691.53 வசூலிக்கப்பட்டது.

(இ) திண்டிவனம் வட்டத்தில் மட்டும்தான் (1—7—77—30—6—78) 1387-ம் பசலியில் 9,967 நபர்களுக்கு அபராத வட்டிக்காக ரூ. 10,48,228-25-க்கு நெ. 1 டிமாண்டு தரப்பட்டது.